Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# அக இலக்கியங்களில் நற்றாயின் மன உணர்வு

முனைவர்.கா.சகாய கிரேஸி[1] & .ஆ.ஆனந்தி[2]
[1]ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி,
பெரியகுளம்.
[2]அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்,
கொடைக்கானல்.

50

**ஆய்வுச் சுருக்கம்:**

உலகின் மூத்த மொழிகளுள் ஒன்றாக விளங்குகின்ற மொழி தமிழ் மொழியாகும்.பல்லாயிரம் ஆண்டுக் காலப் பழமையான இலக்கிய இலக்கணங்களைக் கொண்ட மொழியாகத் தமிழ் மொழி விளங்குகின்றது.சங்க இலக்கியம் பண்டைய தமிழ் நாகரிகம்,மொழிச் சிறப்பு முதலானவற்றை அறிய விரும்புவோருக்குச் சான்றாகவும்,செய்தி ஊற்றதகவும் அமைகிறது.

மனிதன் தன்நிலையில் வாழ வழிகாட்டுவது இலக்கியம்.இதற்கு துணையாவது உளவியல்.இன்றையக் காலக் கட்டத்தில் வேறெந்த அறிவுத் துறையின் அடிப்படையில் இலக்கியம் பயில்வதைக் காட்டிலும் உளவியல் நோக்கில் இலக்கியம் பயில்வது இன்றியமையாத தேவையாக உள்ளது.அந்த வகையில் சங்க இலக்கியங்களை உளவியல் சார் கருத்துகளின் அடிப்படையில் ஆராய வேண்டியது காலத்தின் தேவை எனலாம்.அந்த வகையில் பழந்தமிழரிடத்தே நிலவிய மனப்பதிவினை நற்றாயின் வழியாக வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு முன்னுரை;**

சங்க இலக்கியமானது வாழ்க்கை அடிப்படையில் எழுந்த நாடகப் பண்புடையது.அவற்றுள் அக இலக்கியங்கள் அனைத்தும் காதலால் பண்பட்ட உயர்ந்த வாழ்க்கைக்குச் சான்றாக அமைகின்றன.காதலுணர்ச்சி தோன்றாத காலம் இல்லை.தோன்றாத இடமுமில்லை.அந்த வகையில் சங்க இலக்கியச் செய்யுட்கள் பலவற்றிலும் உளவியல் சார் சிந்தனைகளையும்,மனப் பதிவுகளின் அடையாளங்களையும் கண்டு கொள்ள முடிகின்றது.பழந்தமிழரின் வாழ்க்கையிலும் மனப் பதிவுகள் இடம்பெற்றமைக்குப் பல அகச்சான்றுகளைக் காட்ட முடியும்.அவ்வகையில் சங்க அக இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள நற்றாயின் மன உணர்வுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**உளவியல் – ஒரு விளக்கம்**

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

" உளவியல் என்பது மனித உள்ளத்தின் தன்மைகளை எடுத்து விளக்குவது.சைக்கி,லோகஸ் என்னும் இரு கிரேக்கச் சொற்களும் இணைந்து 'சைக்காலஜி' என வழங்கப்படுகிறது.'சைக்கி' என்றால் 'ஆன்மா' எனவும் 'லோகஸ்' என்றால் 'விஞ்ஞானம்' எனவும் இங்கு பொருள் கற்பிக்கப்படுகிறது."

உளவியல் உள்ளம் எவ்வாறு வேலை செய்கின்றது என்பதைப் பகுத்தாயும் விளக்கமான அறிவியல் மட்டுமன்று.அது நல்ல உளநலத்தைப் பேணுதற்குரிய கொள்கைகளைத் தருகின்றது.நமது திறமைகளை இங்கு 'இட்' என்னும் மனம் இன்பக் கொள்கையை நாடுவதால் தானே வலியச் சென்று தன் ஆசையை நிறைவேற்றிக் கொள்ளும் பெண்ணின் மனநிலையை அறிந்து கொள்ள முடிகின்றது.

**நற்றாய் - விளக்கம்**

அகத்திணை மாந்தர்களில் தாய் என இருவரைக் குறிப்பிடுவது வழக்கம்.ஒருவர் வளர்ப்புத் தாயான செவிலித்தாய்.மற்றொருவர் பெற்றெடுத்த தாய்.இவரை அக இலக்கியங்கள் நற்றாய் (நல்ல தாய்) எனக் குறிப்பிடுகின்றன.இவரை யாய் (என் தாய்) , ஞாய் (உன் தாய்) என்று பாகுபடுத்தி அழைப்பது வழக்கம்.

**பெண்ணின் மன உணர்வு**

மனிதன் உணர்ச்சிகளின் கலவையாகப் படைக்கப்பட்டுள்ளான்.இன்பத்தில் மகிழ்வதும், துன்பத்தில் கலங்குவதும் அவனது இயற்கைப் பண்புகளாகும்.இன்பத்தை விடத் துன்பத்தின் போதே மனதளவில் பெரிதும் பாதிக்கப்படுகிறான்.ஆண்களைவிடப் பெண்களே எளிதில் உணர்ச்சிகளை வெளிப்படுத்துவர்.பெண்கள் துன்ப உயர்வுகளை வெளியிடக் கையற்றுப் புலம்புவதை வடிகாலாகப் பயன்படுத்துகின்றனர்.ஏனெனில் பெண் என்பவள் உடல் அளவில் மட்டமல்லாமல் மன அளவிலும் மிகவும் மெல்லியளாகச் சங்க இலக்கியத்தில் இருந்தே சித்தரிக்கப்பட்டு உள்ளாள்.தலைவி உடன்போக்குச் செல்லும் நிலையில் அவள் பிரிவால் மிகவும் பாதிக்கப்படுவளாகக் காட்டப்படுபவள் தாயே ஆவாள்.தந்தை பிரிவுத்துயரை வெளிப்படுத்துவதாக அகப்பாடல்களில் ஒரு பாடல் கூடக் காணப்படவில்லை. மகளைப் பிரிந்த தாயின் மன உணர்வுகளை வெளிப்படுத்துவதாக அக இலக்கியங்கள் அமைகின்றன.

மேலை நாட்டவர்களின் உளவியல் கோட்பாடுகளைத் தமிழ் இலக்கியத்தில் பொருந்திப் பார்க்கும் போது மிகவும் கவனமாகக் கையாள வேண்டியுள்ளது.எல்லாக் கோட்பாடுகளும் பொருந்தி வருகின்றன என்று கூறிவிட இயலாது.எனினும் இதில் உளவியல் கோட்பாடு ஒரளவு பொருந்தி வருகின்றது என்றே கூறலாம்.

**தன்னே மாற்றம்**

தலைவி தலைவனோடு உடன்போக்கில் சென்றபின் அவளது பிரிவைக் கண்டு தாயானவள் பலவாறு புலம்புகிறாள்.அவ்வாறு புலம்புவதனால் எவ்வித நன்மையும் ஏற்பட போவதில்லை.என்றாலும் தன்னுடைய மனச்சுமை குறைவதாக எண்ணுகிறாள்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

ஒரு மனிதன் கவலையிலிருந்தும்,அச்சத்திலிருந்தும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளப் பல தற்காப்பு முறைகளைக் கையாளுகின்றான்.பெரும்பாலும் இத்தற்காப்புக் கருவிகள் நனவு உள்ளத்தினால் இயக்கப்படுகின்றன என உளப்பகுப்பு வல்லுநரான சிக்மண்ட் பிராய்டு கருதினார்.இத்தற்காப்புக் கருவிகள் எவ்வகையிலும் மனிதனைத் தாக்கவிருக்கும் இன்னலின் உண்மையான நிலையை மாற்றியமைப்பதில்லை.ஆனால் அவை அந்த இன்னலைப் பற்றி மனிதன் கொண்டுள்ள நோக்கை மாற்றியமைக்கின்றன.இவ்வாறு மனிதன் தன்னுடைய நோக்கை மாற்றியமைக்கும் போது ஒரளவிற்குத் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ள நேரிடும்.அதற்குத் தன்னளவில் மாற்றத்தை ஏற்படுத்துதல் என்று பெயர்

“காலே பரிதப்பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே” (குறுந் - 44)

என்ற குறுந்தொகைப் பாடலிலும்,

“இனியே, தாங்குநின் அவலம் என்றீர் அதுமற்று
யாங்ஙனம் ஒல்லுமொ அறிவுடையீரே” (நற்றி – 184)

இப்பாடல்களில் செவிலியும்,நற்றாயும் புலம்புகின்றனர்.அவர்களின் புலம்பல் தலைவனுடன் உடன்போக்குச் சென்ற தலைவிக்குக் கேட்காது என்று தெரித்திருந்தும்,தங்கள் உணர்வுகளைப் புலம்பல் மூலம் வெளிக்காட்டுகின்றனர்.இவ்வுணர்வு தன்னேயே ஏமாற்றுவதால் விளைந்ததுவேயாகும்.

**மன அழுத்தம்**

மன அழுத்தம் என்பது மனிதன் தனது எண்ணங்களை,நினைவுகளைத் தன் மனத்திற்குள்ளேயே அடக்க முயலுவதைக் குறிக்கிறது எனலாம்.இவ்வாறு அமுக்கப்பட்ட உணர்வுகள் சில குறிப்பிட்ட சூழல்களில் தம்மையும் அறியாமல் வெளியாகின்றன. “சில அறிகுறிகள் கனவுகள்,வாய் தவறி வெளிப்பாடும் வார்த்தைகள் போன்றவற்றின் வாயிலாக அமுக்கப்பட்ட இரகசிய வேட்கைகள் மீண்டும் திரும்பும்” என்று பிராய்டு குறிப்பிடுவார்.

“பெயர்த்தனென் முயங்கயான் வியர்த்தனென னென்றனள்
இனியறிந் தேனது…….” (குறுந் - 84)

என்ற பாடலில் சிறுவயது முதல் தாயுடன் இணைந்து துயில் கொண்ட தலைவி பிறகு தாயுடன் உறங்குவதை விரும்பவில்லை.அதனை அவள் செயலால் காட்டியபோது புரிந்து கொள்ளாத தாய் அவள் உடன்போக்கில் ஈடுப ட்டவுடன் ஒரு வேளை தன் மகள் தன்னுடன் உறங்க விரும்பாத காரணம் தலைவனுடன் கொண்ட உறவினால் தானோ என்று மனதில் பதிந்திருந்த அந்நிகழ்வை எடுத்துக் கூறுகிறாள்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**புறத்தெறிதல்**

மனதில் தோன்றுகின்ற ஒரு வகையான உணர்வை மற்றோர் உணர்வாக அடுத்தவர் மேல் காட்டுவதே புறத்தெறிதல் ஆகும்.இது ஒரு வகையான தற்காப்புச் செயல் முறையாகும்.இதில் ஒருவருடைய மனமுரண்பாடு அடங்கியுள்ளது.ஒருவர் தமக்கு ஏக்கத்தைத் தூண்டுகிற ஊக்கிகளை மற்றொருவரின் மீது ஏற்றி கூறித் தம்முடைய முரண்பாட்டை ஈடுசெய்து கொள்ளுகிறார். புறத்தெறிதல் என்பதற்கு மற்றொரு பொருளாக,மற்றவர்களைக் குறைகூறல் என்பதும் கூறப்படுகிறது.உள்ளார்ந்த மனமுரண்பாட்டிலிருந்து எழுகின்ற கவலை அல்லது ஏக்கத்தைப் புறத்தெறிதல் மூலம் குறைத்துக் கொள்ள முடியும் என்று உளவியலாளர் குறிப்பிடுகின்றனர்.

"........இன்றே
மை அணற் காளை பொய்புகலாக
அருஞ்சுரம் இறந்தனள்....." (நற்றி – 271)

என்ற பாடலிலும்,

"செல்பெருங் காளைபொய்ம் மருண்டு
........என்மகள் ஓரன்ன
செய்ய போழ் வெட்டிய பொய்தல் ஆயம்"
மாலை விரி நிலவில் பெயர்பு புறங் காண்டற்கு,
மா இருந் தாழி கவிப்ப
தாஇன்று கழிக,எற்கொள்ளாக் கூற்றே" (நற்றி – 271)

என்ற நற்றிணைப் பாடலிலும்,

"எம் போல்
பெரு விதும்புறு கமாதோ எம்மில்
பொம்மல் ஓதியைத் தன்மொழி கொள்இ
கொண்டு உடன்போக வலித்த
வண்கண் காளையை ஈன்ற தாயே" (நற்றி – 293)

என்ற பாடல்களிலும் தாய்,தலைவி தன்னைப் பிரிந்த ஏக்கத்தை,துன்பத்தை தலைவன் மற்றும் அவன் தாய் மீது குற்றம் கூறுவதன் மூலம் குறைத்துக் கொள்கிறாள்.

**எதிர்ப்பார்ப்பும் ஏமாற்றமும்**

எதிர்ப்பார்ப்பு என்பது மனிதர்கள் அனைவரிடமுமே உள்ளதாகும்.அவ்வெதிர்பார்ப்பு நிறைவேறாத நிலையில் ஏமாற்றம் ஏற்படுகிறது.உளவியல் கொள்கைப்படி மிகவும் பிடித்தமானவர்களிடம் கூட வெறுப்பான சொற்களைக் கூறித் திட்டும் போக்கு ஏற்படும்.ஏனெனில் மிகவும் எதிர்பார்ப்பு கொண்டுள்ள நபரிடம் அத்தகைய எதிர்பார்ப்புக்கு மாறான எதிர்விளைவு காணப்பட்டால், அதனால் ஏமாற்றமும், விரக்தியும்

ஏற்படும்.அவ்விரக்தியின் விளைவே அன்பு கொண்டவர்ளை மோசமான சொற்களால் திட்டவும் காரணமாக அமைகிறது.என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

“ நிழலான்ற விந்த நீரிலா ரிடைக்
கழலோன் காப்பக் கடுகிபு போகி
அறுசுனை மருங்கின் மறுகுடி வெந்த
வெவ்வெங் கலுழி தவ்வெனக் கிழக்கிய” (குறுந் – 356)

தாயானவள் தன் மகள் பொரியோடு கலந்த பாலை மிக்கன என்று கூறி உண்ணாத தன்மையையும், கூந்தலிற் சூடிய மாலை சிக்குண்டாலும்,வளையல்கள் நெகிழ்ந்தாலும் கண் கலங்கும் நிலையினையும் கண்டு தன் மகள் பேதமைத் தன்மை உடையவள் என்று எண்ணியிருந்தாள்.ஆனால் அவள் தாயின் எண்ணத்தைப் பொய்யாக்கும் வகையில் தலைவனுடன் சென்று விட்டாள்.ஆகையால் தான் ஏமாற்றத்திற்கு உள்ளான தன்மையைத் தாய் வெளிப்படுத்துவதனைக் காண முடிகிறது.இக் கருத்தினை ஐங்குறுநூற்றின் மற்றொரு பாடலிலும் காணலாம்.

என்றும் உள்ளினள் கொல்லோ தன்னை
நெஞ்சு உணத் தேற்றிய வஞ்சினக் காளையோடு
அழுங்கல் மூதூர் அலர்எழச்
செழும்பல் குன்றம் இறந்தஎன் மகளே (ஐங்கு – 312)

என்ற பாடலில் என் மகள் அவளுடைய மனம் ஏற்றுக் கொள்ளுமாறு இனிய மொழிகளை கூறிய ஆண் மகனோடு காடு மலைகளை தாண்டிச் சென்றுள்ளாள்.ஆனால் இங்கு நான் வாழும் ஊரோ என் மீது பழி தூற்றுகிறது.இந்த ஊர் என்னை பழி தூற்றுமே என்று நினையாது அவள் என்னையும் நினைக்கவில்லையோ எனக் கூறும் நற்றாயின் புலம்பலில் எதிர்ப்பார்ப்பும்,ஏமாற்றமும் நிறைந்துள்ளது.

**அடிப்படை மனவெழுச்சி**

மனிதர்களின் ஒவ்வொரு செயல்களுக்கும் அவனது மனமே அடிப்படையாக அமைகிறது.குழந்தை பருவத்திலிருந்தே ஒருவரிடம் காணப்படும் மனவெழுச்சிகள் அடிப்படை மனவெழுச்சிகள் எனப்படும்.அவ்வெழுச்சியைப் பற்றிப் பல உளவியலாளர்கள் ஆய்வுகள் செய்துள்ளனர்.வாட்சன் என்பவர் சினம்,அச்சம்,அன்பு ஆகிய மூன்று மெய்ப்பாடுகளை அடிப்படை மனவெழுச்சிகள் என்று குறிப்பிடுகிறார்.

அச்சம்

ஒரு குறிப்பிட்ட சூழல் உண்மையிலேயே அச்சத்தை உண்டாக்குவதாக இல்லாவிட்டாலும்,அது ஆபத்தானது என்று தனிமனிதன் எண்ணினால் அவனிடம் அச்சம் தோன்றும் என்று உளவியலாளர் கூறுவர்.

“ நின்று வேனில் உலர்ந்த காந்தள்

அழலவிர் நீள்இடை நிழலிடம் பெறாஅது
ஈன்று கான் மடிந்த பிணவுப்பசி கடந்தென
மான்ற மாலை,வழங்குநர்ச் செல்இய
புலி பார்த்து உறையும் புல்லதர்ச் சிறுநெறி
யாங்கு வல்லுநர் கொல் தானே – யான்,தன் ” (நற்றி – 29)

என்ற பாடலில் நற்றாயின் அச்ச உணர்வு வெளிப்படுகிறது.இத்தன்மையை ஐங்குறுநூற்றின் மற்றொருப் பாடலிலும் காணலாம்.

பல்லூழ் நினைப்பின் நல்லென் ஊழ
மீளி முன்பின் காளை காப்ப
முடியகம் புகாஅக் கூந்தலள்
கடுவனும் அறியாக் காடிறந் தோளே. (ஐங்கு – 314)

என் மகள் எத்தனை வகையில் ஆராய்ந்தாலும் இந்த உடன்போக்கே சிறந்தது என்று முடிவு செய்தாள்.எமனை ஒத்த வலிமை மிக்க காளையாகிய தலைவன் காவல் புரிய அவனுடன் சென்றாள். என் மகள் கொண்டை முடியும் அளவுக்குக் கூட கூந்தல் வளராத இளமையுடையவள்.அவள் குரங்குகளும் அறியாக் கொடிய காட்டைக் கடந்து சென்று விட்டாளே ! என நற்றாய் அச்ச உணர்வு அடைகிறாள்.

**அன்பு**

ஒருவர் மற்றொருவர் மீது கொண்டுள்ள அன்பு அவர்கள் பிரிந்திருக்கும் நிலையிலே வெளிப்படும்.அன்பு என்னும் மனவெழுச்சி ஆக்கம் தருகின்ற மனவெழுச்சியாகும்.இதனை,

“ தண்மழை தலையின்றாக நந்நீத்துச்
சுடர்வாய் நெடுவேற் காளையொடு
மடவா வரிவை போகிய சுரனே ” (குறுந் – 378)

என்னும் பாடலில் தலைவி தன்னைப் பற்றிச் சிறிதும் எண்ணாமல் தலைவனுடன் சென்றாலும்,தலைவியின் மீது கொண்ட அன்பால் அவள் உடன்போக்குச் சென்ற பாலை நிலத்தில் மழை பெய்து குளிர வேண்டும் எனத் தெய்வத்திடம் வேண்டுவதன் மூலம் தலைவி மீது தாய் கொண்ட அன்புணர்வு வெளியாகிறது.இதனை அகநானூற்றின் பாடலிலும் காணலாம்.

கொன்றை அம்சினைக் குழற்பழம் கொழுதி
வன்கை எண்கின் வயநிரை பரக்கும்
இன்துணைப் படர்ந்த கொள்கையோடு ஓராங்கு,
குன்ற வேயின் திரண்டஎன்
மென்தோள் அஞ்ஞை சென்றே ஆறே.

என்னும் பாடலில் தன் மகள் தன் பெரிய மனையை விட்டு பிரிந்து சென்று தலைவனுடன் கொடிய காட்டுப் பாதையில் பயணம் செய்தாள்.இதனை எண்ணிய நற்றாய் அவள் செல்லும் ஊர்களில்

உள்ள மக்கள் அவளுக்கு உதவுவார்களாகுக எனத் தாய் தன் ஏக்கத்தினை வெளிப்படுத்தவதாக இப்பாடல் அமைந்துள்ளது..இக் கருத்தினை அகநானூற்றின் (களிற்றியானை நிரை – 25,55,105,மணிமிடை பவளம் – 195,207,219,நித்திலக் கோவை – 315,383) ஆகிய பாடல்களிலும் மேற்க்கண்ட கருத்தினைக் காணலாம்.

**தொகுப்புரை**

சங்க இலக்கியத்தில் சுட்டப்படும் நற்றாய் மன உணர்வு நிலையில் சிந்திப்பவராகக் காட்டப்படுகிறார்.தலைவியின் மீது தாய் உணர்வு நிலையில் அன்பு கொண்டவராகவும்,தலைவியின் எதிர்கால வாழ்க்கையின் மீது அக்கறையும்,எதிர்ப்பார்ப்பும் கொண்டவராகவும் சில நேரங்களில் அந்த எதிர்ப்பார்ப்பு ஏமாற்றத்தை விளைவிப்பதாகவும் சங்க இலக்கியப் பாடல்கள் நமக்கு உளவியல் ரீதியாக சுட்டிக்காட்டுகின்றன.உளவியல் அறிஞர்கள் மனித உணர்வுகள் குறித்து கூறும் கருத்துக்கள் சங்க இலக்கிய கதைமாந்தரான தாயரின் இயல்புக்கு பொருந்தி வருவதை அக இலக்கியப் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

**கலைச்சொற்கள்;**

1.தன்னே மாற்றம் – தன்னை தானே ஏமாற்றிக் கொள்ளல்

2.புறத்தெறிதல் – மனதில் தோன்றுகின்ற உணர்வை பிறர் மேல் காட்டுவது

3.அழுங்கல் - அரவம்,இரக்கம்,கேடு,அச்சம்,சோம்பல்,பேரிரைச்சல்,நோய்.

4.மூதூர் - பழமையான ஊர்.

5.வேனில் – இளவேனில் காலம்.

6.கடுவன் – ஆண் குரங்கு.

**பார்வை நூல்கள்**

1. நற்றிணை – நவம்பர் (2003) – முனைவர் கதிர் . மகாதேவன் (உ.ஆ) – கோவிலூர் மடாலயம்,கோவிலூர் – 630307 (காரைக்குடி அருகில்)
2. ஐங்குறுநூறு – ஏப்பிரல் (2003) – முனைவர் அர.சிங்காரவடிவேலன் (உ.ஆ) - கோவிலூர் மடாலயம்,கோவிலூர் – 630307 (காரைக்குடி அருகில்)
3. அகநானூறு – செப்டம்பர் (2004) – கவிஞர் நா.மீனவன்,தெ.முருகசாமி (உ.ஆ) - கோவிலூர் மடாலயம்,கோவிலூர் – 630307 (காரைக்குடி அருகில்)
4. குறுந்தொகை – 2016 – இரா.இராகவையங்கார் – சாரதா பதிப்பகம் / கௌரா பதிப்பகம்
5. திறனாய்வு அணுகுமுறைகள் – கு.பகவதி (ப.ஆ)
6. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி – 10
7. ஃபிராய்டின் கலை இலக்கிய உளப்பகுப்பாய்வு – அரங்க நலங்கிள்ளி
8. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி – 12

Funding : The Author's Acknowledge the Financial Support From Jayarai Annapakiam College For Women, Periyakulam Under JACFRP Scheme ( A.ANANTHI – PHDTAM21P051 ) and Extend Their Sincere Gratitude to The Management